ஜீவித நௌகா

அல்லது

பிச்சைக்காரி

Produced by

K. & K. PRODUCTIONS — ALLEPPEY

ஜீவித நௌகா

அல்லது

பிச்சைக்காரி

மலையாளிகளின் பழக்க வழக்கங்களை ஒட்டி எடுக்கப்பட்ட தமிழ்ப் படம்.

கதைச் சுருக்கம்

கல்வி அறிவில்லாத ஒரு ஜமீந்தாரின் அதிகாரத்திற் குட்பட்ட ஒரு சிற்றூரில் அவரின் மானேஜராக இருந்து வருகிறான் ராஜு. அவன் தம்பி சோமனிடத்தில் அள வற்ற அன்புடையவன், மனைவி ஜானுவிற்கு அடங்கிய வன். ஜானு பணத்தாசை பிடித்தவள். அவ்வூரில் இருக் கும், தாழ்ந்த ஜாதிக்காரனாகிய கேசவக்கணியானின் மகள் ஓணத்திருநாளன்று, அவர்கள் வீட்டின் முன்பு வந்து ஆடிப் பாடவும், அதில் ஈடுபட்டவனாகிய சோமன், நாளடைவில் அவளையே காதலிக்கிறான். ராஜு அவனை B. A. வரையும் படிக்கவைத்து கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கிறான். கேசவகணியான் காலமாக லக்ஷ்மி அனாதை யாகிறாள். சோமன் அவள் பரிதாப நிலையைக் கண்டு காலேஜில் நடக்கும் மேரிமக்டலீனா (ஒரு பெண்ணின் வறுமையின் கொடுமையால் மானத்தை இழந்து தன் தவறை உணர்ந்து அருளுக்கு பாத்திரமாகும் கிருஸ்துவின் ஆடல், பாடல் கொண்ட ஒரு கதை.) நாட்டிய நாடகத் தில் நடிக்கச் செய்து அதில் வரும் பொருள்மூலம் உதவு கிறான். சோமன் லக்ஷ்மியைத்தான் கல்யாணம் செய்து கொள்ளுவேன் என்று பிடிவாதம் செய்கிறான். ராஜு முதலில் கோபித்தானாயினும் தம்பி மேலுள்ள அன்பினால்

மனைவியையும் ஒரு விதமாக சமாதானப்படுத்தி அவர்களின் கல்யாணத்தை நடத்துகிறான். சோமன், லக்ஷ்மி, ராஜு, ஜானு இவர்கள் பல வருஷங்கள் ஒன்றாகவே இருந்து வருகின்றனர். ஆனால், சோமனுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. லக்ஷ்மி அவ்வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் ஒருத்தியாகவே செய்தும், ஜானுவின் கோபத்திற்கும், அடிக்கும், வசவிற்கும் ஆளாகியதோடு ஒரு குழந்தைக்கும் தாயாகிறாள். இத்தகைய துன்பங்களினாலும் ஜானுவின் தலையணை மந்திரத்தினாலும், குடும்பம் இரண்டாகப் பிரிகிறது. பிரிவை எண்ணி சகோதரர்கள் கண் கலங்குகின்றனர். சோமன் தனியாகச் சென்றும், குடும்பத்தை நடத்தப் போதிய வருமானம் இல்லாமையால், மனைவியையும், மகனையும் தனியே விட்டு வேலை தேட வெளியூருக்குப் போகிறான். தனியே விடப்பட்ட லக்ஷிமியும், குழந்தையும், ஜானுவினாலும் அவள் தம்பி சங்குவினாலும் அளவில்லாத துன்பம் அனுபவித்து காலச் சுழலில் சிக்கித் தவித்து முடிவில் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் தன் கணவன் சோமன் வேறொரு பெண்ணுடன் உல்லாசப் பிரயாணம் செய்வதைக் கண்ட லக்ஷ்மி வண்டியைத் தொடர்ந்தோடி கீழே விழுந்து மூர்ச்சையாகிறாள். மூர்ச்சை தெளிந்தெழுந்த லக்ஷிமி தன் பிள்ளையோடு ஆத்ம தியாகம் செய்ய தீர்மானிக்கிறாள்.

தன் புத்திரனுக்கு செய்ய வேண்டிய கடமைக்காக உயிர்வாழ நினைக்கிறாள். ஏழைகளின் நலனையும், தன் மகனையும் காப்பாற்ற நாடகக் கம்பெனியில் சேருகிறாள். பல நாடகங்களை நடித்து (அராபியாவை ஆண்டுவந்த அந்திப்பாஸ் தன் மனைவியை மறந்து சகோதரனின் மனைவியிடம் சுகித்து கேளி விலாசத்தில் ஆடிப்பாடி இருப்பவனை ஸெயின்ட் ஜான் கண்டிக்கிறார்.) இந்த நாடகத்தை சோமன் பார்க்கிறான். தன் மனைவியைக் காண ஆசை கொள்கிறான். தம்பதிகளின் சந்திப்பு எங்கே எப்படி என்பதை வெள்ளித் திரையில் பாருங்கள்.

ஜிவித நெளகா

அல்லது

பிச்சைக்காரி

பாட்டுகள்

1. ஓணப் பாட்டு

வாய்நிறைய வெண்ணெய்
    வாரித் தாரேன் கண்ணு
ஆயர் குலமணி ஓடிவாடா.

அண்ட சரா சரம்
    கண்டு மயங்கினேன்
கொண்டல் வண்ணு நீயும் ஓடிவாடா.

தங்கச் சரப்பளி
    துங்க மார்பாடிட
பங்கஜ நேத்ரனே ஓடிவாடா.

பீலித் தலைக்கு நான்
    பூமாலை சூட்டுவேன்
நீலக்கார் வண்ணனே ஓடிவாடா.

2. லக்ஷிமி

ஜோராக உடுத்தேன் நானே
சுகமானது பட்டால் ஜில் ஜில் அதி
சுகமானது பட்டால் ஜில் ஜில்.
நல்லாடை, ஆடை.

ஆனந்த மயமானேனே,
ஆளாகினேனே (ஜோராக)

அதிக மினியதாய் இதுமிக நலனாய்
ஆன தினாலே தானே
ஆன தினாலே தானே.
சுகானுபவமும் உறுமவராலே
சோகமில்லை இனிமேலே
சோகமில்லை இனிமேலே (ஜோராக)

இதய சுகமிலே அவரெனை நாடின்
ஈஸ்வரனின் கிருபையாலே
ஈஸ்வர னின் கிருபையாலே
மகா பாக்கிய மென்றுலகினில் ஓதும்
ப்ரேம மதாகும் காதல்
ப்ரேமமதாகும் காதல் (ஜோராக)

3. டான்ஸ் ட்ராமா

மேரிமக் டலீனா

1. கார்முகில் கிறி வெளிப்படும் திங்களால்
பார் முழுதும் வெள்ளி பூசிய போல்
காணும்கலீல ஜில்லாவிற் கொரு முத்து
மாலையாய்த் தோன்றும் நெயின் பட்டினம்

2. தாரா கணங்களே தாழ்வரை நோக்கியே
ஆராயுமாறென்ன அற்புதமோ
உங்களின் கூட்டத் திருந்தவர் யாரேனும்
அங்குபோய் வீழ்ந்தாரோ கூறுவீரே

3. தாரித் திரியம் உள்ளக்குடும்ப மதினிலே
ஆரும் விரும்பப் பிறந்தாள் ஓர் பெண்
பாறையின் மேல் ஒரு பன்னீர்ச் செடிதானும்
சீராய் முளைப்பதோர் ஆச்சரியமே

4. வேடிக்கையாய் வலை வீசியே வஞ்சகன்
நாடி ஒளிந்ததைப் பார்த்திருக்க
மேய்ந்திடச் சென்ற பெண்மானு மதிற்பட்டு
சாய்ந்திட்டதே தன் நிலை அழிந்தே

5. ஒற்றைப் பிடி சோற்றுக்கேங்கி இருந்தவள்
கொற்றக்குடை சூடும் ராணி ஆனாள்
ஆஹா சௌந்தர்யமே நீ ஒரு நாரியை
வாகாய் அடைந்தால் ஆகாததுண்டோ

6. ஏங்குக, ஏங்குக, ஏனவிழி மாதே
ஏங்குவோர்க் கீசன் அபயம் ஈவான்

7. சந்தேகத்தோடு நீ வாசலில் நிற்பானேன்
சுவாதந்திரியமாய் உள்ளே போவாய்பெண்ணே
கெட்டவளானாலும் கொட்டிய கண்ணீரால்
திட்டமாய்த் தூயவள் ஆனாய்நீயும்

8. நாதா நின் வார்த்தைகள் கேட்டு நடக்காமல்
நானபராதங்கள் செய்து போனேன்
கட்டுக்கடங்காமல் கெட்டவள் ஆனாலும் நின்
பட்டுபோல் பாதத்தில் சேர்த்தருளே

9. தட்டினால் வாசல் திறக்குமென்றே அன்று
பட்டாங்க மாகவே சொன்னதினால்
தாபமாய் வந்துநின்தாளின் மேல் முட்டினேன்
பாபியாம் என்னைக் கண்பார்த்தருளே

10. அல்லல் பெருங்கடல் தன்னில் அலைபோலே
சொல்லிற்கடங்காத் துயர்ப்படுவேன்
ஏழையாம் என்னைக்கரை சேர்க்கவேண்டுமே
ஆழியின் மீதே நடந்தவனே

11. செய்யாதவைகளைச் செய்தவள் ஆனாலும்
ஐயாவே என்னைப் புறம் தள்ளாதே
தீயினைப்போலும் தணுப்பிக்கும் நின் கரம்
தன்னாலே நானும் சமைந்தவளே

12. போகலாம் பெண்ணே நின் துக்கம் தவிர்ந்தாய்நீ
ஆகஉன் விஸ்வாசம் காத்ததுவே
செய்ததோர் பாதகம் எண்ணிப் பச்சாதாபம்
எய்திடில் ஆமது பிராயச்சித்தம்.

4. சோமன்—லக்ஷிமி

சோமன் வனராணியே எந்தன்
மன ராணியே—வாவா
வன ராணியே

லக்ஷிமி சுரதாரமே நானுந்
தரமாகுமா—நானுந்
தரமாகுமா

சோமன் வாழுவதோ நீ பூமியில் என்
ராணி, வாவா, வனராணியே (வன)

லக்ஷிமி உன் திருநாமம் பாடி நானும்
பூமியில் வாழ்வேன் ராஜா
பூமியில் வாழ்வேன் ராஜா
(நானுந் தரமாகுமோ)

சோமன் வனராணியே, எந்தன் மனராணியே
வாவா வனராணியே

லக்ஷ்மி நானொருபாவம் ஏழையுமானேனே
(நானுந் தரமாகுமோ)

சோமன் ப்ரேமையின் உலகில் ஏழை என்றும்,
எளியவர் என்பதும் இல்லை
எளியவர் என்பதும் இல்லை,
வாவா, வனராணியே

5 பின்னணி

வனிதே இனிதாய் எண்ணிடாதே
எண்ணிடாதே இனிமை எனவே
தோன்றும் வாழ்வொரு துன்பமே
இதிலில்லை என்றுமே இன்பமே
வாழ்விதே துன்ப வாரியாயினும்
சூழ்க நீ மனச் சாந்தியே
சுகமெலாம் வரும் சுமதியே
வியர்வை விழவே உழைப்பதால் வரும்
ஊதியம் சுகம் யார்க்குமே
உணவிலே ருசி சேர்க்குமே (எண்ணி)

6 பின்னணி

சகாயம் ஆரும் அல்லடா
நீதானே நின் சகாயம்
நிதானம் முயலு நின்வழி
நீதானே நின் சகாயம்
தன்னாலே சேர்ந்த காசுதான்
தினையளவே போதும்

சகாவே தன்னுழைப்பதே
தலைமுறைக்கு மாகும்
விசால புவன மல்லவோ
நீதானே நின் சகாயம்
அங்கியர் உழைப்பின்
பலனதைக் தொடாதே நீ
விஷம் விஷம்
தொடாதே நீ விஷம் விஷம் (சகாவே)

7 லக்ஷிமி—சோமன்

லக்ஷிமி பாஹிதாயே—பார்வதி பரமே
ஸ்வரி லளிதே
நாயகி, ஜெகன் நாயகி, சுப
தாயகி வரதே

சோமன் ஆழமதாகிய மாகடலா
மதில் ஈசிறு ஜீவிதநாவாய்
கவிழ விடாமலே அருளிடு
நீ கிருபை
ஆதரவீஸ்வரிதாயே
ஆதரவீஸ்வரி தாயே (பாஹி)

8 லக்ஷிமி

கதியாரும் இல்லை தாயே,
பாழும் விதியாலே வந்த ஜன்மமோ (கதி)

ஆதரவில்லை யாருமே
நாதனும் எங்கோ தூரமாய்
அபவாதமாகும் தீயில் நான்
ஆளி ஆளி வேகவோ (கதி)

9. லக்ஷிமி—சோமன்

லக்ஷிமி தேடினரோ யாதும்-தனம் நாடிட
தேகம் வாடினரோ
கூடுவரோ மேலும்-மிகு கோமளமாகியே
பாடுவரோ

சோமன் வாடுவளோ பாவம், விரகாகுலமாகியே
வேகுவளோ
கூடுவளோ சாந்தி-குலமாதகம் மேவியே
ஏகுவளோ

லக்ஷிமி நாலு பாடும் இருள் சூழும் வழியில்
போவதெவ்வழி ஈசா
நாம் இனி சேர்ந்திடும் உதயம் வருமோ
நிசி இது போய் பிராணயேசா
ஹா, நிசி இது போய் பிராணயேசா

சோமன் எனதுடல் இங்கும், ஆருயிர் அங்கும்
வாழ்விதம் தான் ஆமோ
தன்யனுமாய் நன்றுடிப் பாடும்
சுகமினி வரும் எந்நாளோ
ஹா, சுகமினி வரும் எந்நாளோ

லக்ஷிமி பதியைப் பிரியும் நாரியின் கதி
அது துயரம் துயரே
சோகமிதும் சுகமாகும் தானே
மருவிடில் என் பதியை
நான், மருவிடில் என் பதியை (தேடினரோ)

10. லக்ஷிமி

நீயே தானே ஈசா-துணை
நீயேதான் மகேசா
ஆமோ சுகம் இனிமேல்
ஓ தயாளா (நீயே)

இந்த உலகிலே வாழ்க்கையே
இனியும் நானும் வேண்டுவதோ
ஆதாரம் யாரோ-ஆகாரம் நீரோ (நீயே)

எந்தன் மகனும் பசியால் அழுவே
ஏகுவேன் விழிநீர் ஒழுக
வந்தேனே பாவி
மாதாவாய் மேவி (நீயே)

11. பின்னணி

பாவமாம் இது பாவாய்,
ஆத்ம ஹத்யா பாவமே
ஜீவனை அழிக்காதே
ஐயன் நல்கிய பாவனமாகிய
ஜீவனை அழிக்காதே
ஜீவன்மேல் விருப்பாலே ஜீவராசிகள்
பாடுபடும் இதோ (ஜீவனை)

பத்னி மாத்ரம் அல்ல நீ ஒரு
மாதாவும் மகளே
பர்த்தா இதம்போல் புத்திர பாலன
தர்மமும் பெரிதே
மாத்ரு ஸ்நேகம் பாரில் ஈதே
பாழிலே அழிக்காதே பாவாய்,
ஜீவனை அழிக்காதே

12. லக்ஷிமி

வீதிகளில் வாழ்ந்திடுவார்-
நம் சோதரரைக் கைவிடலாமோ

வேதனையால் வாடிடுவார் இப்
பாதகமே பார்த்திடலாமோ

தாய்நாட்டிலே பிச்சை
எடுத்திடவே தான் விடாதீர்

குரு காந்தி தன் நாடாம் இதில்
பெருங் குற்றம் கொள்ளாதீர்

நேதாக்களே இவரை மறந்தினி
சுகமெய்தலாமோ

குரு காந்தி தன் ஆணை மறந்தினி
குற்றம் கொள்ளாதீர் (வீதி)

வீதிகள்தோறும், பரவச நாதம்
கேட்கும் அன்னம், கொடு கொடு

வயறெரியும் போதாருமுயர்த்தும்
நாதம் கொஞ்சம் கொடு கொடு (வீதி)

13. அரிச்சந்திரன்

(விருத்தம்)

ஆரடி கள்ளி நீதான் அடாத இவ்
விருளிற் தானே
பேரிடி மழையில் வந்து பிணந்தனைச்
சுடவும் ஆனாய்
கூறடி இங்கு நீதான் குணமது
கொண்டாற் கென்றும்
பாரடி தகுதி இல்லாப் பண்பற்ற
செய்கை தானே

சந்திரமதி

(விருத்தம்)

கள்ளி நான் அல்ல ஐயா கபடியும்
அல்ல நாயேன்
துள்ளி என் பாலன் காட்டில்
தோன்றிய நஞ்சால் மாண்டான்
எள்ளி நான் அந்நாட் செய்த
பாவமே இவ்வாருச்சே
தள்ளி நீர் விரட்டிடாமல் தயைசெய்து
காப்பீர் போற்றி

அரிச்சந்திரன்

(விருத்தம்)

யாருக்கு மொருபலன் இல்லாமலே
இங்கு கூலிக்கு நிற்குமென்னை
பாருக்குள் மானிடப் பண்புள்ளவர்
தம்மில் ஒருவனுக்கும்
பேருக்குள் சேர்த்துப் பணத்தைத்
தராமல் ஏமாற்றியே
கோரிக்கிடந்தால் பலன் ஒன்று
மில்லைக் கொண்டு செல்லே

சந்திரமதி

(விருத்தம்)

என் ஜீவிதாசையின் அந்திம
வாயுவீசி
வெந்தீச் சிதைக்கு வைத்தேன்
மகனைச் சுடுவானாய்
சிந்தை உருகக் கேட்டெந்தன்
தீனதைக்கு இரங்கிடுவீர்
எந்தன் கையில் ஒரு செல்லாக்
காசும் கொடுக்க இல்லையே

---

14. ஜானு

பசியால் உயிர் வாடி
படிவாசல்கள் தேடி
வருமிக்குடி கேடி
கனிவாய் அருள் நாடி
மணி மாளிகை மேலே
மருவும் அந்தக் காலே
கனியாத தினுலே
கதியாய் இதுபோலே

15. பின்னணி

நன்மைகள் செய்தால் நன்மைகள் நேரும்
நல்கினுல் யாரும் தரும் தரும்
பரோபகாரம் செய்வோர்க் கென்றும்
பாரில் நல்லது வரும் வரும்
சந்ததம் ஈஸ்வர சிந்தை எழுந்தால்,
என்றும் நல்லது வரும் வரும்.

சுபம்.

———

பாடல், வசனம்	...	வித்வான் பா. ஆதிமூலன்
சங்கீத மேற்பார்வை	...	தக்ஷிணாமூர்த்தி
பாடியவர்கள்	...	கண்டசாலா P. லீலா ரேவம்மா திருச்சி லோகநாதன் மகபூப்
பின்னணி சங்கீதம்	...	A. ராமராவ்
நடனம்	...	C. R. ராஜகுமாரி இந்திரா ஆச்சார்யா B. S. சரோஜா கோபாலகிருஷ்ணன் பாலசந்திரன்
நடன ஆசிரியர்கள்	...	கோபிநாத் கட்டக்
ஒளிப்பதிவு	...	P. பாலசுப்ரமணியம்
உதவியாளர்கள்	...	மாதவன் நாயர் கிருஷ்ணன்குட்டி நாயர்
ஒலிப்பதிவு	...	R. ராஜகோபாலன், B.A.
உதவியாளர்கள்	...	D. V. நாதன் இராமமூர்த்தி பாஸ்கரன்
லாபரெட்டரி	...	கிருஷ்ணய்யா
எடிட்டிங்	...	R. இராஜகோபாலன்
மேக்கப்	...	ஹரிபாபு T. B. பார்த்தசாரதி
ஆர்ட் டைரக்டர்	...	P. T. ரோமீஸ்

நடிகர்கள்

திக்குரிசி சுகுமாரன் நாயர்	...	சோமன்
குஞ்சு குஞ்சு பாகவதர்	...	ராஜு
B. S. சரோஜா	...	லக்ஷிமி
பங்கஜவல்லி	...	ஜானு
ஆதிமூலன்	...	கணியார்
முதுகுளம் இராகவம் பிள்ளை	...	வக்கீல்
S. P. பிள்ளை	...	சங்கு
மாத்தப்பன்	...	குஞ்சு

Director	—	K. Vembu
Studio	—	Udaya—Alleppey
Produced by	—	K. & K. Productions
Recorded on	—	R. C. A. Sound System

நியூ இந்தியா பிரிண்டர்ஸ், அமிஞ்சிக்கரை, மதருஸ்-10.

Await: MALLESWARI

Vauhini's Telugu Hit